**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 108** **நாள்: 09.09.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டதிற்குட்பட்ட நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை இணைந்து நடத்திய டெங்கு நோய் தடுப்பு குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டதிற்குட்பட்ட நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் இணைந்து நடத்திய டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (08.09.2017) அன்று ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இதில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குறித்த தகவல் பரிமாற்றங்களை கூட்டாக சேர்ந்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது. டெங்கு நோயை தடுக்கும் பொருட்டு கொசு மருந்து அடிப்பது புகை பரப்பும் பணியை மேற்கொள்வது, நோயாளிகளை கண்டறிந்து சிகிச்சை அளிப்பது, வீட்டில் கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழிப்பது குறித்தும் கூட்டாக செயல்பட தீர்மானிக்கப்பட்டது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் டெங்கு மற்றும் கொசுத்தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விளக்கமும் அளிக்கப்பட்டது. மேலும் தனியார், அரசு மருத்துவமனைகளில் தினந்தோறும் காய்ச்சலுக்காக அனுமதிக்கப்பட்ட நபர்களின் விவரம் பெறப்பட்டு அவர்களின் குடியிருப்பு பகுதிகளில் கொசுத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்திப்பட்டது, வேறுஎவரேனும் காய்ச்சல் பாதிப்பு உள்ளனரா என கண்டறிந்து சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தி உரிய சிகிச்சை பொது மக்களுக்கு அளிக்கவும் அறிவுறித்திப்பட்டது.

அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அரசு / தனியார் பள்ளிகள், அரசு / தனியார் மருத்துவமனைகள் மற்றும் பொது மக்களின் குடியிருப்பு பகுதிகளில் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை ஆய்வு செய்து அனைத்து அதிகாரிகளும் ஒன்றினைத்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவது குறித்து அறிவுறுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி சுற்றியுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் பூங்காக்களில் விழிப்புணர்வு கண்காட்சி நடத்திடவும் அறிவுறுத்தப்பட்டது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா. கார்திகேயன் இ.ஆ.ப அவர்கள், தெரிவித்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திருமதி.எம்.விஜயலட்சுமி, இஆ,ப, அவர்கள் மற்றும் மாநகர நல அலுவலர், தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல நல அலுவலர், பூச்சியியல் வல்லுநர்கள் மற்றும் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குனர், பேரூராட்சி இணை இயக்குநர், நகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**